## February 1, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இஸ்ரேல், சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு 1,567 கோடி டாலர் (சுமார் ரூ.1.43 லட்சம் கோடி) மதிப்பிலான நவீன ஆயுதங்களை விற்பனை செய்ய அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.

(i) ஈரான் மீதான அமெரிக்காவின் ராணுவத் தாக்குதல் குறித்த அச்சம் நிலவுவதால் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் போர் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், அமெரிக்க வெளியுறவுத் துறை இந்த முக்கியமான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இதுகுறித்த அறிக்கை அந்நாட்டு நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ii) சவூதி அரேபியாவுக்கு -

சவூதி அரேபியாவுக்கு மட்டும் சுமார்சவூதி 900 கோடி டாலர் மதிப்பிலான ஆயுதங்களை வழங்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

இதில் முக்கியமாக 730 'பேட்ரியாட்' ஏவுகணைகள் மற்றும் அவற்றுக்குத் தேவையான தளவாடங்கள் வழங்கப்பட உள்ளன.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை கூறுகையில், 'சவூதி அரேபியா நேட்டோ அமைப்பில் இல்லாவிட்டாலும், அமெரிக்காவின் மிக முக்கியமான கூட்டாளியாக உள்ளது. சவூதி அரேபியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது, வளைகுடா பிராந்தியத்தின் அரசியல் ஸ்திரத்தன்மைக்கும், பொருளாதார முன்னேற்றத்துக்கும் அவசியமானது.

இந்த ஏவுகணைகள் அந்நாட்டின் வான் பாதுகாப்பு கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) இஸ்ரேலுக்கு...:

இஸ்ரேலுக்கான ஆயுத விற்பனை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த மதிப்பு 667 கோடி டாலர் ஆகும்.

380 கோடி டாலர் செலவில் 30 'அபாச்சி' ரக தாக்குதல் ஹெலிகாப்டர்கள் வழங்கப்பட உள்ளன. இவை நவீன இலக்கு கண்டறியும் கருவிகளைக் கொண்டவை.

இதுதவிர, சுமார் 198 கோடி டாலர் மதிப்பில் 3,250 இலகுரக ராணுவ வாகனங்களை இஸ்ரேல் வாங்குகிறது. அதேபோல், ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள கவச வாகனங்களின் என்ஜின்களை நவீனப்படுத்த 74 கோடி டாலர், இதர ஹெலிகாப்டர்களுக்காக 15 கோடி டாலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

(iv) அமைதி மத்தியில்...: கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேல் நீடித்து வரும் இஸ்ரேல்-ஹமாஸ் போரை முடிவுக்குக் கொண்டு வர அமெரிக்க அதிபர் டிரம்ப் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். போரினால் சீர்குலைந்துள்ள பாலஸ்தீன பகுதிகளை மறுசீரமைக்கவும், அங்கு அமைதியை நிலைநாட்டவும் அமைதிக் குழு மூலம் அவர் திட்டமிட்டுள்ள நிலையில், இந்த ஆயுத விற்பனை அறிவிப்பு வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. 'இந்த ஆயுத விற்பனையால் அந்தப் பிராந்தியத்தின் ராணுவ சமநிலை மாறாது. மாறாக, இஸ்ரேல் தனது எல்லையையும், மக்களையும் பாதுகாத்துக் கொள்ளத் தேவையான தற்காப்புத் திறனை மட்டுமே இது அதிகரிக்கும்' என்று அமெரிக்க வெளியுறவுத் துறை விளக்கம் அளித்துள்ளது.

2.ஆப்பிரிக்க நாடான காங்கோ குடியரசின் கிழக்குப் பகுதியில் பெய்த தொடர் மழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி, 'கோல்டன்' தாது அகழ்ந்தெடுக்கப்படும் சுரங்கங்கள் இடிந்து விழுந்தன.

(i) வடக்கு கிவு மாகாணத்தில் உள்ள ருபாயா பகுதியில் நிகழ்ந்த இக்கோர விபத்தில் சுமார் 200-க்கும் மேற்பட்ட

தொழிலாளர்கள் உயிரிழந்ததாக அப்பகுதியைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள 'எம்23' கிளர்ச்சிக் குழுவினர் தெரிவித்தனர்.

(ii) 'தற்போது வரை 200-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்; பலர் மண்ணுக்குள் புதையுண்டுள்ள நிலையில், மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) உலகின் 40 சதவீத கோல்டன் தாது காங்கோவிலிருந்தே கிடைக்கிறது. அறிதிறன்பேசி மற்றும் கணினி தயாரிப்பில் முக்கியப் பங்கு வகிக்கும் இந்தத் தாதுவின் பெரும்பகுதி ருபாயா சுரங்கங்களில் இருந்தே எடுக்கப்படுகிறது. கடந்த 2024, மே மாதம் முதல் கிளர்ச்சியாளர்களின் பிடியில் உள்ள இந்தச் சுரங்கங்களில், முறையான பாதுகாப்பு வசதிகள் இன்றி தொழிலாளர்கள் கைகளால் சுரங்கம் தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்தபோது நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.

3. உலகின் நம்பர் 1 வீராங்கனை அரினா சபலென்காவை வீழ்த்தி முதன்முறையாக ஆஸ்திரேலிய ஓபன் சாம்பியன் பட்டம் வென்றார் கஜகஸ்தானின் எலனா ரைபகினா. இரண்டாவது ஆண்டாக சபலென்கா இறுதியில் தோற்றுள்ளார்.

(i) நிகழாண்டு சீசனின் முதல் கிராண்ட்ஸ்லாம் பந்தயமான ஆஸி. ஓபன் மெல்போர்ன் நகரில் நடைபெறுகிறது. மகளிர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் பெலாரஸின் உலகின் நம்பர் 1 வீராங்கனை சபலென்காவும்-முன்னாள் விம்பிள்டன் சாம்பியன் ரைபகினாவும் மோதினர்.

(ii) சபலென்கா கடந்த 2023 2024 இல் ஆஸி., ஓபன் பட்டம் வென்றிருந்தார். கடந்த 2025 இறுதியில் மடிஸன் கீஸிடம் தோற்றுபட்ட வாய்ப்பை இழந்தார்.

4. டிராக் ஆசியக் கோப்பை சென்னை 2026 போட்டி ஆடவர் எலைட் பிரிவில் இந்தோனேஷியா தங்கம் வென்றது. உஸ்பெகிஸ்தான் வெள்ளியும், எஸ்டிஏடி ரேசிங் அணி வெண்கலமும் வென்றன.

(i) சைக்கிளிங் கூட்ட சைக்கிளிங் ஆசியமைப்பு, இந்திய கூட்டமைப்பு, தமிழ்நாடு சைக்கிளிங் சங்கம், எஸ்டிஏடி சார்பில் டிராக் ஆசியக் கோப்பை போட்டி சென்னை அடுத்த வண்டலூரில் உள்ள வெலோட்ரமில் நடைபெற்றது.

(ii) 4 கிமீ. தொலைவு கொண்ட ஆடவர் எலைட் பிரிவில் இந்தோனேஷிய அணி தங்கம் வென்றது.

5. ஃபயர் ஓபன் போட்டி ஸ்குவாஷுடன் தொடர்புடையது.

6. பஞ்சாபில் நடைபெறும் குரு ரவி தாஸ் ஜெயந்தி விழாவில் பங்கேற்க பிரதமர் நரேந்திர மோடி அந்த மாநிலத்துக்கு பயணிக்கவுள்ளார்.

(i) 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பக்தி இயக்கத் துறவியான குரு ரவி தாஸின் 649-ஆவது ஜெயந்தி விழா கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி, பஞ்சாப் மாநிலம், ஜலந்தரில் உள்ள குரு ரவி தாஸ் மதத்தின் தலைமை மையமான தேரா சச்கந்த் பல்லனுக்கு பிரதமர் மோடி வருகை தரவுள்ளார்.

(ii) ஆதம்பூர் விமான நிலையத்துக்கு ஸ்ரீ குரு ரவிதாஸ் என புதிய பெயர் சூட்டும் நிகழ்ச்சியில் பங்கேற்கும் அவர், லூதியானா விமான நிலையத்தில் புதிய முனையத்தையும் திறந்து வைக்கவுள்ளார்.

7. 2026-27 நிதியாண்டிற்கான தனது தொடர்ச்சியான ஒன்பதாவது மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்யவிருக்கும் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், தான் ராஜ்யசபாவில் பிரதிநிதித்துவப்படுத்தும் கர்நாடக மாநிலத்தில் ஒரு தனித்துவமான விவசாய மேம்பாட்டுத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக தனது நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்ட (MPLADS) நிதியைப் பயன்படுத்தியுள்ளார்.

(i) "கல்யாண சம்பதா" என்ற இந்தத் திட்டமானது, விவசாயிகளுக்கு அதிகாரம் அளிக்கும் திட்டங்களைச் செயல்படுத்த, வெவ்வேறு மாவட்டங்களில் உள்ள பின்தங்கிய கிராமங்களைத் தேர்ந்தெடுப்பதை உள்ளடக்கியது.

(ii) ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட விவசாயப் பொருட்களைக் கண்டறிந்து, அவற்றைச் சிறந்த சந்தைப்படுத்துதலுக்காக மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றுதல்.

(iii) இந்தத் திட்டமானது விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs) மூலம் செயல்படுகிறது; உணவு பதப்படுத்துதல் மற்றும் பயிற்சிப் பிரிவுகளை நடத்துவதற்கான அமைப்புகளைத் தேர்ந்தெடுப்பதில் நபார்டு வங்கி உதவுகிறது.

(iv) இந்தத் திட்டங்களுக்காக அவர் கர்நாடகாவில் பெல்லாரி, பீதர், கலபுரகி, கொப்பல், ராய்ச்சூர், விஜயநகரா மற்றும் யாதகிரி ஆகிய ஏழு மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

(v) இந்த ஏழு கிராமப்புறப் பகுதிகளிலும் பதப்படுத்துதல் மற்றும் பயிற்சி உள்கட்டமைப்பை நிறுவுவதற்காக, தனது MPLADS நிதியிலிருந்து தலா ₹50 லட்சம் ஒதுக்கியுள்ளார்.

(vi) மாவட்ட வாரியான திட்டங்களும் தாக்கங்களும்

* பீதர் (சோயாபீன்): பெட்குண்டா கிராமத்தில், சோயாபீன் பயிற்சி மற்றும் பொது வசதி மையத்திற்காக நிதி பயன்படுத்தப்பட்டது. இது சோயா பனீர், சுவையூட்டப்பட்ட பால் மற்றும் மாவு ஆகியவற்றை உற்பத்தி செய்து, 21,000-க்கும் மேற்பட்ட மக்களுக்கு மறைமுகமாகப் பயனளிக்கிறது.

* பெல்லாரி (மிளகாய்): 372 பெண்கள் உட்பட 1,115 பேர் பங்கேற்கும் ஒரு திட்டம், மிளகாய் சாகுபடி மற்றும் பதப்படுத்துதலில் கவனம் செலுத்துகிறது.

* கலபுரகி (சோளம்): 1,000 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு விவசாயக் குழு, சுத்தம் செய்யப்பட்ட சோளம், சோள மாவு மற்றும் சோளப் பொரி ஆகியவற்றை உற்பத்தி செய்கிறது.

* ராய்ச்சூர் (பருப்பு வகைகள்): 14 பருப்பு ஆலைகள் மற்றும் வேளாண் சந்தைப்படுத்தல் குழுக்களுக்கு, பிராண்டட் மற்றும் நீண்ட நாள் கெடாத பருப்பு வகைகளை உற்பத்தி செய்ய உதவி வழங்கப்பட்டது.

* விஜயநகரா (நிலக்கடலை): வறண்ட குட்லிகி தாலுகாவில், வேர்க்கடலை வெண்ணெய், உப்புக்கடலை மற்றும் வேர்க்கடலை மிட்டாய் ஆகியவற்றை உற்பத்தி செய்ய ஒரு மையம் நிறுவப்பட்டது. இது 575 விவசாயிகளுக்கு நேரடியாகப் பயனளிக்கிறது.

* யாதகிரி (நிலக்கடலை): பட்நல்லி மகளிர் விவசாய உற்பத்தியாளர் அமைப்பு, ஒரு நிலக்கடலை பதப்படுத்துதல் மற்றும் பயிற்சி மையத்தை நடத்தி, பெண் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதுடன், விவசாயிகளின் வருமானத்தையும் அதிகரித்துள்ளது.

(vii) MPLADS நிதியானது உள்கட்டமைப்புக்கான ஒரு ஆதாரமாக மட்டுமல்லாமல், கிராமப்புற கர்நாடகாவில் சமூக-பொருளாதார மாற்றம் மற்றும் நிலையான வளர்ச்சிக்கு ஒரு ஊக்கியாகவும் செயல்படுகிறது.

8. சிகரெட் உள்ளிட்ட புகையிலைப் பொருள்கள் மீது மத்திய அரசு விதித்துள்ள கூடுதல் கலால் வரி, ஞாயிற்றுக்கிழமை (பிப்.1) முதல் அமலுக்கு வர உள்ளது.

அதுபோல, பான் மசாலா பொருள்கள் மீதான புதிய சுகாதார செஸ் வரி விதிப்பும் பிப்ரவரி 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வர உள்ளது.

அதன் காரணமாக, சிகரெட் உள்ளிட்ட புகையிலைப் பொருள்கள் மற்றும் பான் மசாலா பொருள்களின் விலை பன்மடங்காக உயரும் என தெரிகிறது.

மத்திய அரசு கடந்த 2017- ஆம் ஆண்டு ஜூலை 1-ஆம் தேதி சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) என்ற ஒரே வரிவிதிப்பு நடைமுறையை அறிமுகம் செய்தது. அது முதல், சிகரெட், புகையிலை, ஹுக்கா, ஜர்தா உள்ளிட்ட பிற புகையிலைப் பொருள்கள் மீது 28 சதவீத ஜிஎஸ்டியும் கூடுதலாக செஸ் வரியும் விதிக்கப்படுகின்றன.

இந்நிலையில், ஜிஎஸ்டி விகித மாற்றம் மற்றும் கரோனா காலத்தில் மாநிலங்களின் ஜிஎஸ்டி வருவாய் இழப்பை ஈடுசெய்ய வாங்கப்பட்ட கடன் ஜனவரி 31-ஆம் தேதியுடன் திரும்பச் செலுத்தப்பட்டுள்ள நிலையில், இழப்பீட்டு செஸ் நடைமுறையும் நிறுத்தப்பட உள்ளது. இதன் காரணமாக, சிகரெட் உள்ளிட்ட புகையிலைப் பொருள்கள் மற்றும் பான் மசாலா பொருள்கள் மீது விதிக்கப்படும் வரி விகிதம் குறையாமல், உயர் அளவிலேயே இருப்பதை உறுதி செய்யும் வகையில், 'மத்திய கலால் திருத்தச் சட்ட மசோதா 2025', மற்றும் பான் மசாலா உற்பத்தி மீது புதிய செஸ் வரி விதிக்கும் 'தேசியப் பாதுகாப்பு செஸ் மசோதா 2025' ஆகியவற்றை நாடாளுமன்றத்தில் கடந்த ஆண்டு டிசம்பரில் மத்திய அரசு அறிமுகம் செய்து நிறைவேற்றியது.

இன்று முதல் கூடுதல் வரி: இந்தப் புதிய திருத்தச் சட்டங்கள் இரண்டும் ஞாயிற்றுக்கிழமை (பிப்ரவரி 1) முதல் நடைமுறைக்கு வருகின்றன.

அதன்படி, 65 மி.மீ. நீளம் கொண்ட ஃபில்டர் இல்லாத சிகரெட் மீது கூடுதலாக தலா ரூ. 2.05 வரி விதிக்கப்படும். இதே நீளம் கொண்ட ஃபில்டர் சிகரெட் மீது கூடுதலாக ரூ. 2.10 வரி விதிக்கப்படும்.

65 மி.மீ. முதல் 70 மி.மீ. நீளம் கொண்ட சிகரெட் மீது ரூ. 3.40 முதல் ரூ. 4 வரை கூடுதல் வரி விதிக்கப்படும்.

70 மி.மீ. முதல் 75 மி.மீ. நீளம் கொண்ட சிகரெட் மீது ரூ. 5.40 கூடுதல் வரி விதிக்கப்படும்.

வழக்கத்துக்கு மாறான அல்லது தரமற்ற வடிவமைப்பு கொண்ட சிகரெட்டுகள் மீது அதிகபட்சமாக தலா ரூ.8.50 கூடுதல் வரி விதிக்கப்படும். மிகவும் பிரபலமான சிகரெட் வகைகள் இந்த வரி வரம்பின் கீழ் வராது.

மெல்லக்கூடிய வகையிலான ஜர்தா, புகையிலை மீது 82 சதவீத கலால் வரியும், குட்கா மீது 91 சதவீத கலால் வரியும் விதிக்கப்பட உள்ளது.

மேலும், புதிய தேசியப் பாதுகாப்பு செஸ் சட்டத்தின் கீழ், நாடு முழுவதும் உள்ள பான் மசாலா உற்பத்தியாளர்கள் பிப்ரவரி 1- ஆம் தேதி முதல் நிறுவனத்தை புதிதாக பதிவு செய்ய விண்ணப்பிக்க வேண்டும். இந்த நிறுவனங்கள், அதிலுள்ள அனைத்து பேக்கிங் இயந்திரங்களும் நன்கு தெரியக் கூடிய வகையில் கண்காணிப்பு கேமராக்களைப் பொருத்துவதும், அதன் பதிவுகளை குறைந்த பட்சம் 24 மாதங்களுக்குப் பாதுகாத்து வைத்திருப்பதும் கட்டாயமாகும்.

நிறுவனத்திலுள்ள இயந்திரங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் கொள்ளளவையும் கலால் அதிகாரிகளிடம் இந்த நிறுவனங்கள் தெரியப்படுத்த வேண்டும். இந்த இயந்திரங்களின் உற்பத்தித் திறனுக்கேற்ப செஸ் வரி விதிக்கப்படும்.

அதாவது, 40 சதவீத ஜிஎஸ்டியை கணக்கில் எடுத்துக்கொண்ட பிறகு, பான் மசாலா மீதான மொத்த வரிச் சுமை தற்போதைய 88 சதவீத அளவிலேயே தக்க வைக்கப்படும்.

மேலும், ஓர் இயந்திரம் குறைந்தபட்சம் தொடர்ச்சியாக 15 நாள்கள் செயல்படாமல் இருந்தால், கலால் வரியில் தள்ளுபடி கோரவும் நிறுவனங்களுக்கு உரிமை உண்டு.

மாநிலங்களுக்குப் பகிர்ந் தளிக்கப்படும்: 'சிகரெட் உள்ளிட்ட புகையிலைப் பொருள்கள் மீதான இந்த கலால் வரி மூலம் வசூலிக்கப்படும் தொகை நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் மாநிலங்களுக்கு திரும்ப பகிர்ந்தளிக்கப்படும். மேலும், தேசியப் பாதுகாப்பு செஸ் சட்டத்தின் கீழ், பான் மசாலா நிறுவனங்கள் மீது அவற்றிலுள்ள இயந்திரங்களின் உற்பத்தித் திறனுக்கேற்ப இந்த செஸ்வரி விதிக்கப்படும்.

எனவே, உற்பத்தித் திறனுக் கேற்ப ஒவ்வொரு நிறுவனத்துக்கும் இந்த செஸ் வரி விதிப்பு மாறுபடும். இந்த செஸ் வருவாயின் ஒரு பகுதி, சுகாதார விழிப்புணர்வு அல்லது பிற சுகாதாரத் திட்டங்களுக்காக மாநிலங்களுடன் பகிர்ந்துகொள்ளப்படும்' என்று இந்த மசோதாக்களை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியபோது மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது